**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 32

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Sabariswaran

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 26th day of March 2021.

**Date: 26.03.2021, S.C.No. 228/2018, PW32, Tr. Sabariswaran**

**முதல் விசாரணை...**

நான் தற்பொழுது திண்டுக்கல் மாவட்டம் பண்ணைக்காடு கிராமத்தில் இருக்கிறேன். 6, 7 வருடங்களுக்கு முன்பு நானும் என் நண்பன் கார்த்திக்-ம் அலுவலக வேலையாக இராமாபுரம் சென்று கொண்டிருந்த போது இராமாபுரம் மெயின்ரோட்டில் கூட்டமாக இருந்தது. அங்கு போலீசார் இருந்தார்கள். விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் திருட்டு வழக்கு சாட்சியாக கையெழுத்து வேண்டுமென என்றும் உதவி செய்யுமாறும் கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்தது கிடையாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள் போட்டேன் அதிலுள்ள விவரங்கள் தெரியாது. சமூக பொறுப்பு உள்ளதால் கையெழுத்து போட்டேன் வேறு எதுவும் தெரியாது. முதல் எதிரி, 2ஆம் எதிரி மற்றும் 6ஆம் எதிரி ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையெழுத்து அசாஆ.43 முதல் 45, கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அசாஆ.46.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டதன் பெயரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அ.த.கு.வி...

05.09.2014 ஆம் தேதி வேலை காரணமாக நானும் கார்த்திக் ம் காலையில் 10.00 மணி அளவில் வள்ளுவர் சாலையில் சென்று கொண்டிருந்த போது இராமாபுரம் வள்ளுவர் சாலையில் இருந்த இரும்பு குடோன் முன்பு போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும்

அப்போது நானும் கார்த்திக்-ம் அங்கு சென்று பார்த்ததாகவும் அங்கு வளரசவாக்கம் குற்ற பிரிவு ஆய்வாளர் காப்பர் தகடுகளை ஏற்றிய லாரியை மடக்கி கொள்ளையடித்து கொண்டு வந்து அந்த குடோனில் மறைத்து வைத்திருந்த நபர்களை பிடித்து வைத்திருந்ததாகவும் அவர்களை விசாரிக்க வேண்டி இருப்பதால் சாட்சியாக இருக்க உதவி செய்ய கேட்டுக் கொண்டதன் பெயரில் நான் ஒப்புக்கொண்டேன் என்றும் என் முன்னிலையிலும் கார்த்திக் முன்னிலையிலும் ஆய்வாளர் பிடித்து வைத்திருந்த 6 நபர்களை தனித்தனியாக விசாரித்து அவர்கள் எந்த வித நிர்பந்தமும் இன்றி எவ்வாறு அந்த காப்பர் கம்பிகளை கொள்ளையடித்ததாகவும் அதனை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்தார்கள். அது சமயம் அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன் என்றும் கைப்பற்றுதல் மகஜரில் காப்பர் பிளேட், டிரெயிலர் லாரி, வரி ரசீதுகள் ஆகிய வழக்கு சொத்துக்களை எதிரி செல்வமிடம் இருந்து கைப்பற்றிய போது நான் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. திருட்டு வழக்கு என்று பொதுவாக போட்டேன். நான் எதிரிகளுக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது நான் பார்த்தது கிடையாது. நான் எம்பிஏ பட்டதாரி என்றும் அதனால் கையெழுத்து போட்ட அனைத்து தாள்களையும் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-Vidhya

Taken to my dictation and corrected
by me to open court read over to the witness
and admitted by him as correct.

Sd/-Vidhya

I Addl.Dist.Judge,

I Additional District court,

Tiruvallur.